සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම2018 -
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation2018 -

| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | විෂයය / பாடம் / Subject | தமிழ் மொழியும் இலக்கியமும் - I | පත්‍රය / வினாத்தாள் / Paper | I, | පැය / மணித்தியாலம் / Hours | 01 |
|---|---|---|---|---|---|---|---|

නම
பெயர்
Name

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

தடித்த சொல் பற்றியதற்கு விடை தருக.

1. **வண்டோ** கானத் திடையிருந்து. வண்டு என்பதன் பொருள்.
   1. கோகிலம் 2. மயில் 3. அலி 4. அளி
2. **மிக்காரைச்** சேர்தல் மிகமான முன் இனிதே. மிக்கார் என்பதன் பொருள்.
   1. அன்புள்ளவர் 2. சாந்தமானவர் 3. பரிவுள்ளவர் 4. அறிவுடையவர்
3. சட்ட நிபுணர்களான **வழக்கறிஞர்கள்**. வழக்கறிஞர்கள் என்பதன் கருத்து.
   1. சட்டவல்லுநர் 2. நண்பர் 3. உறவினர் 4. மேதாவிகள்
4. பனையோலைப் பாயிற் படுத்**துறங்கும்**. உறங்கும் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. சயனம் 2. துயிலும் 3. விழிக்கும் 4. படுக்கும்
5. வீடு மோரிடை யூற்றினுக் **கஞ்சுவோர்**. அஞ்சுவோர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. துணிவோர் 2. பணிவோர் 3. ஏற்றுவோர் 4. இரங்குவோர்

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்க.**

6. இண்டர்பேஸ் என்ற வார்த்தை எனக்கு சிதம்பர சக்கரமாய் இருந்தது. இண்டர்பேஸ் என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்.
   1. சுட்டித்திண்டு 2. வன்தட்டு 3. இடைத்தொடர்பு 4. அடைவு
7. எதிர்க்கருத்துள்ள சொற்களின் இணைப்பு.
   1. ஆலம் - அமிர்தம் 2. குளம் - பொய்கை
   3. சுகம் - சௌக்கியம் 4. எதிர்வாதம் - பிரதிவாதம்
8. மாலை, அம்பு எனும் பொருளைத்தரும் ஒரு சொல்.
   1. சரம் 2. தொடை 3. கண்ணி 4. ஆரம்
9. அலவன் என்பது ஆண் நண்டைக் குறிப்பது போல புலியின் ஆண்.
   1. கடுவன் 2. கலை 3. களிறு 4. போத்து
10. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக அமைவது.
   1. தோட்டந்துரவு 2. இன்னார் இனியார் 3. செக்கச்சிவந்த 4. அருமை பெருமை



kalvi.lk

**பின்வருவனவற்றுள் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. கமலனின் முயற்சியால் அவன் குடும்பம் தலையெடுத்தது. இங்கு தலையெடுத்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து.

    1. பெருநட்டமடைதல் 2. வறுமையடைதல் 3. முன்னேறுதல் 4. தளர்ச்சியுறல்

12. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு

    1. மாராயம் 2. ஓம்படை 3. மெய்க்கீர்த்தி 4. சங்கநிதி

13. ஆயிரம் சங்குகளின் நடுவே இருக்கும் உயர்ச்சாதிச்சங்கு.

    1. வலம்புரி 2. பாஞ்சன்யம் 3. சங்கு 4. வெண்சங்கு

14. ஏழ்மையிலும் சிறப்பு வேண்டும் என்பதை உணர்த்தும் பழமொழி

    1. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான். 2. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
    3. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது. 4. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

15. விடயப்புலமையின்றி வேறொன்றைக் குறை கூறல் என்பதை வலியுறுத்தும் பழமொழி.

    1. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி.
    2. ஆடத்தெரியாதவள் மேடை கோணல் என்றாளாம்.
    3. ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்.
    4. அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும்.

16. உருவும் நிழலும் போல என்ற உவமைத்தொடருக்கு நிகரான உவமைத்தொடர்.

    1. ஓடும் புளியம்பழமும் போல 2. தாமரையிலைத் தண்ணீர் போல
    3. எள்ளும் எண்ணெயும் போல 4. அணை கடந்த வெள்ளம் போல

17. சிறு குழந்தையின் வளர்ச்சியைக் குறிக்கப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்.

    1. கண்ணுக்கு கண்ணாக 2. வழிமேல் விழி வைத்து
    3. வைத்த கண் வாங்காமல பார்த்து பார்த்து 4. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்

18. வில்லிலிருந்து பாணம் விர்ரென பாய்ந்து வந்தது. விர்ரென என்பது

    1. இயல்பாக 2. மெதுவாக 3. விரைவாக 4. ஆறுதலாக

19. குவளை மலர் போன்ற கரு நீலக் கண்கள். கரு நீலக் கண்கள் என்பது எவ்வகைத்தொகை

    1. உவமைத்தொகை 2. உம்மைத்தொகை 3. பண்புத்தொகை 4. வேற்றுமைத்தொகை

20. இரு சொற்களில் ஒன்றை தனியாக பிரிக்கும் போது பொருள் தராது அமைவது.

    1. அடுக்குத் தொடர் 2. இணைமொழி 3. சிலேடை 4. இரட்டைமொழி

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. “ச” என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்

    1. ஆட்சி 2. பாசி 3. சனம் 4. சோறு

22. பின்வருவனவற்றுள் பகுபதம்

    1. ஆடு 2. சிங்கம் 3. ஆடல் 4. கரம்

23. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயரடை

    1. வேகமாக 2. அழகான 3. விரைவாக 4. மெல்ல



kalvi.lk

24. அனுபவப் பேறைப் பொருளாகக் கொண்ட வேற்றுமை

1. மூன்றாம் வேற்றுமை 2. நான்காம் வேற்றுமை
3. ஐந்தாம் வேற்றுமை 4. ஆறாம் வேற்றுமை

25. திரிதல் விகாரப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்.

1. கற்குகை 2. நீலவானம் 3. பலாப்பழம் 4. மாமரம்

26. பெயர்ப்பயனிலை கொண்டமைந்த வாக்கியம்

1. அவன் போனான். 2. அவன் ஒரு பாடகன்.
3. வீசியது காற்று 4. கல்லை உடை.

27. சிறுவர்களிடையே ஒற்றுமை ஓங்கட்டும். இதில் வரும் ஓங்கட்டும் என்பது

1. குறிப்பு வினை 2. வியங்கோள் வினை 3. ஏவல் வினை 4. எதிர்மறை வினை

28. இம்முறை கடும்மழை பெய்தது. குளங்கள் நிறையவில்லை. இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.

1. ஆகவே 2. எனவே 3. ஆயினும் 4. அத்துடன்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.

1. பெயர்ச்சொல் - மரம், இலை, கல்
2. வினைச்சொல் - ஓடினான், எழுந்தான், பெய்யாது
3. பெயரடை - சிறிய, அழகான, வரைந்த
4. வினையடை - அழுது, பெய்த, விழுந்து

30. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.

1. உவமைத்தொகை - மதிமுகம், பிறைநுதல், முத்துப்பல்
2. உம்மைத்தொகை - சேரசோழர், பால்பழம், இரவுபகல்
3. வேற்றுமைத்தொகை - வீடு கட்டினான், வைரமோதிரம், பொற்காப்பு
4. வினைத்தொகை - கார்மேகம், குளிர்நிலவு, கடிநாய்

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

31. வடமாகாணத்தின் நெற்செய்கையை அபிவிருத்தி செய்யுமுகமாக விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு நெல்லை ________________ வழங்கியது.

1. நிவாரணமாக 2. மானியமாக 3. அன்பளிப்பாக 4. முதலீடாக

32. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ________________ தெரிவுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

1. சுயேட்சை வேட்பாளர் 2. விருப்பு வேட்பாளர்
3. முதன்மை வேட்பாளர் 4. கட்சி வேட்பாளர்

33. தனியார் நிறுவனத்தில் வேலை செய்த உத்தியோகத்தருக்கு அவரது மாதாந்த சம்பளத்திலிருந்து ________________ சிறு தொகை ஒதுக்கப்பட்டது.

1. ஓய்வூதியப் பணமாக 2. வேதனமாக
3. ஊழிய சேமலாப நிதிக்காக 4. சன்மானமாக

34. வீதி விபத்துக்களால் ஏற்படும் இழப்புக்கள் பற்றி இளம் சந்ததியினருக்கு ________________ ஏற்படுத்த வேண்டும்.

1. நம்பிக்கை 2. முக்கியத்துவம் 3. கடமை 4. விழிப்புணர்வு



kalvi.lk

**வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. திருக்குறளை தமிழ்கள் மாத்திரமின்றி

1. பிறர் விரும்புவதில்லை. 2. பிறரும் விரும்பிக் கற்கின்றார்கள்.
3. பிறராலும் விரும்பிக் கற்கப்படுகிறது. 4. பிறராலும் விரும்பிக் கற்கிறார்கள்.

36. நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் கூட்டம் ________________ .

1. அலை மோதின 2. அலை மோதினர்
3. அலை மோதியது 4. அலை மோதினார்கள்

**தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

படுக்கும் மெத்தையில் பஞ்சை இழுக்கிறாய்
பாதவிரல்நகம் பல்லால் கடிக்கிறாய்
அடுக்கும் கறியை அலக்கழிக்கிறாய்
அல்லும் எல்லும் இந்தப் பொல்லாங்கு செய்கிறாய்

37. விரல்நகம் என்பது எவ்வகைத் தொகை?

1. வேற்றுமைத்தொகை 2. பண்புத்தொகை
3. வினைத்தொகை 4. உம்மைத்தொகை

38. இப்பாடலில் எல் என்பது எதனைக் குறிக்கிறது?

1. இரவு 2. கங்குல் 3. நிசி 4. பகல்

39. அல்லும் எல்லும் என்பது எவ்வகைத் தொடர்?

1. இரட்டை மொழி 2. அடுக்குத் தொடர் 3. இணை மொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) அவனுக்குப் பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கின்றது.
ஆ) பஞ்ச பூதங்களும் அவன் வசப்பட்டு ஊழியஞ் செய்து கொண்டு நிற்கின்றன.
இ) உயிரினங்களுக்குள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகின்றான்.
ஈ) மனிதன் தன் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றான்.
உ) மிகச் சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்று விடும்.

1. உ,ஆ,இ,அ,ஈ 2. ஆ,இ,அ,உ,ஈ 3. ஈ,ஆ,இ,அ,உ 4. இ,அ,ஈ,ஆ,உ

( 40 X 1= 40 புள்ளிகள் )


kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම2018 -
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation2018 -

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | |
| විෂයය / பாடம் / Subject | தமிழ் மொழியும் இலக்கியமும் - II | |
| පත්‍රය / வினாத்தாள் / Paper | II, | |
| පැය / மணித்தியாலம் / Hours | 2 | |

නම
பெயர்
Name

## பகுதி II

1. சுருக்கமான விடை எழுதுக.
   i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   "இரையெடுத்துச் சென்று குனிந்தலகால்"
   ii. "விட்டிர்ராதே! விட்டிர்ராதே! பிடி என்று கத்தினேன்" என்ற பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
   iii. "பணி என்ற சொல்லைக் கொண்டு பெயராகவும், வினையாகவும் தனித் தனியாக இரண்டு வாக்கியங்கள் அமைக்குக.
   iv. தன்னைத் தான் பார்த்து வெடித்துச் சிரிக்கிறது என் பித்து மனம். இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைத் தருக.
   v. "இருதலைக் கொள்ளி" என்ற மரபுத்தொடரின் கருத்து யாது?
   vi. "நான் மனிதன் அறிவின் பசியில் அலைபவன்" இங்கு அறிவின் பசி என்பதன் கருத்து யாது?
   vii. சிறுமி என்னை இவ் அடக்குமுறையிலிருந்து காப்பாற்றுபவர்கள் யாருமில்லையா என அழுதாள் பொருத்தமான நிறுத்தற்குறியினையிட்டு மீண்டும் இவ்வாக்கியத்தை எழுதுக.
   viii. குற்றியலுகரத்தில் வரும் மெய்யெழுத்துத் தொகுதி எது?
   ix. தரப்பட்ட நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்தி மீள எழுதுக.
   நன்றியுரை, தலைமையுரை, தமிழ்மொழி வாழ்த்து, மங்கள விளக்கேற்றல், சிறப்பு விருந்தினர் உரை
   x. அறிக்கையில் தகவல் திரட்டும் வழிமுறைகள் இரண்டு தருக?

( 10 X 2 = 20 புள்ளிகள் )

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏற்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

   i. மக்களிடம் போதைப் பொருட் பாவனை அதிகரித்து வருகிறது. மாணவர்கள், வயது வந்தோர் போதைப்பழக்கத்திற்கு அடிமையாவதால் கல்வி நிலை வீழ்ச்சியடைகிறது. சமூக விரோத செயற்பாடுகள் அதிகரிக்கின்றது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைகிறது. போதைப் பொருட் பாவனையின் தீங்குகளை விளக்கி இப்பழக்கத்திலிருந்து விடுபட உமது ஆலோசனைகளை முன்வைத்து **விளக்கக் கட்டுரை** எழுதுக.

   ii. ஏட்டிலே எழுதப்பட்ட தமிழ்மொழி அச்சுவாகனம் ஏறி நூல் வடிவம் பெற்று தற்போது இணையத்தில் வலம் வருவதால் தமிழ்மொழி புத்துயிர் பெற்றுள்ளது. தமிழ்மொழியின் அழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை நவீன தொழிநுட்ப சாதனங்களையே சாரும் என்ற கருத்தில் மாணவர் மன்றத்தில் நீர் ஆற்றும் **மேடைப்பேச்சு**.



kalvi.lk

iii. நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகம் எமது நாட்டில் அதிகரித்த வண்ணமே உள்ளது. தமது உரிமைகள் பற்றி சிறுவர்களுக்கு போதிய விழிப்புணர்வின்மையும், பெரியோர்கள் சிறுவர்களின் விலைமதிப்பற்ற தன்மையை உணராமையுமே அடிப்படைக் காரணங்களாகுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதன் அவசியம் பற்றி இருவருக்கிடையிலான **உரையாடல்**.

iv. சற்குணம் எப்போதும் எளிமையையே விரும்புபவர். ஆனால் சோம்போறியாக வாழ விரும்பாதவர். தனக்கென சொந்தமாக ஒரு நிறுவனத்தை வைத்திருந்தாலும், பெருமையில்லாதவர். ஏழைச்சிறார்கள் பலர் அவரின் உதவியால் கல்வி கற்கின்றனர். ''தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் உத்தமர்'' எனும் கருப்பொருளில் **சிறுகதை** எழுதுக. ( 25 புள்ளிகள் )

3. கீழே தரப்பட்ட உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

நிலையில்லாமல் மாறும் அழகின்பத்தை நிலை பெறச் செய்து, வேண்டும் போது கிடைக்குமாறு செய்வதால் கலை தேவைப்படுகிறது. நிலையாமையே உலகத்தின் இயற்கை என்பர் சான்றோர். யாக்கை, இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் புலவர் சிலர் உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவை மட்டுமில்லாமல் அழகு, உணர்ச்சி என்பனவும் நிலையில்லாதவைகளே. மேற்கு வானத்தில் மாலையில் காணப்படும் அந்தி அழகு நொடிக்கு நொடி மாறிக் கொண்டேயிருக்கிறது. உள்ளம் வியந்து போற்றும் அழகு மிக்க சிறந்த காட்சியை வானத்தில் கண்டு மகிழ்கின்றோம். சிறிது நேரம் கழிந்த பிறகு மீண்டும் அதனை கண்டு மகிழ விரும்பினால் அந்த அழகு புலன்களுக்கு எட்டாத ஒன்றாகி விடுகிறது. ஒரு நாள் ஒரு வேளை உள்ளத்தில் தோன்றிய புதிய உணர்ச்சி மற்றொரு நாள் மற்றொரு வேளையில் தோன்றுதல் அரிதாகிறது. இவ்வாறு மறைந்து மாறிப்போகும் அந்த அழகையும் உணர்ச்சியையும் மீண்டும் பெற்று மகிழ விரும்பினால், அதற்காக கலையின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. அதற்கு உற்ற கருவியாய் இருப்பது கற்பனையேயாகும். ஓரிடத்தில் கண்ட அழகையும் உணர்ச்சியையும் கற்பனை வடிவத்தில் படைத்துக் காக்க வேண்டும். மறைந்து போகும் மாலைக் கதிரவனின் அழகை ஓவியம் மறையாமற் காத்துத் தருகிறது. வளர்ந்து மாறும் குழந்தையின் அழகைச் சிற்பக்கலை என்றும் உள்ளதாக்கிக் காட்டுகிறது. மாறிப்போகும் உள்ளத்து உணர்ச்சியை அவ்வாறே பிடித்து வைத்து வேண்டும் போதெல்லாம் கொணர்ந்து தருவன இசைக்கலையும் இலக்கிக்கலையும் ஆகும். இவ்வாறு நிலையில்லாதவற்றை நிலையின என்று ஆக்கும் நல்ல ஆற்றல் கலைக்கு அமைந்திருக்கின்றது.

( 10 புள்ளிகள் )

4. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முயற்சியுடையரே முன்னேறுவர், முயற்சியுடையரே புகழ் பெறுவர், மதிப்புறுவர், மகிழ்ச்சியுறுவர். ஒரு கருமத்தைச் செய்யத் தொடங்கின் இடைவிடாது முயலுங்கள். இடையிடையே தோன்றும் இன்னல்களைக் கண்டு மருளாதீர்கள். மருண்டவர் தோற்றவரே. எண்ணிய கருமத்தில் கண்ணாயிருங்கள். சிறியர் நகை மொழிக்குச் செவிசாய்க்காதிருங்கள். துணைவர் பகையானமைக்கு துன்புறாதீர்கள். நம்முன்னோர் எவ்வாறு கல்வியில், வீரத்தில், கடமையிற் சிறப்புற்றார். இன்று மேனாட்டார் வானாட்டார் போல் மதிப்படைந்தமை எதனால்? சிந்தியுங்கள். கட்டை வண்டியிலே செய்த பயணம் காற்று வேகத்தில் நாற்றிசையும் செல்கிறது. இருந்த இடத்திலிருந்து பெருந்தொலைவிலுள்ள பேச்சைக் கேட்கவும் இன்றைய மனிதனால் முடியும். இந்த ஆற்றல் யாரால் வந்தது? எதனால் கிடைத்தது? சோம்பியிருந்து தூங்கி மடியாமல் முழுமனிதனாக முயலுங்கள். விடாது முயலுங்கள். மனிதனுக்குள் மாண்புமிக்க சக்தியுள்ளது. அதை வெளிப்படுத்த வேண்டும். முயற்சியின் வழிப்படுத்த வேண்டும்.

1. முயற்சியுடயவர் பெறும் மேன்மைகள் எவை?
2. விடாமுயற்சியால் மனிதர்கள் கண்டறிந்த பேறுகள் 2 தருக.
3. முயற்சியால் சிறப்புப் பெற்றவர்களாகப் பந்தியில் குறிப்பிடப்படுவோர் யார்?
4. பொருள் தருக; மருளல், திசை
5. இப்பந்திக்குப் பொருத்தமான பழமொழி 2 தருக. (5 X 2 = 10 புள்ளிகள் )

5. எமது நாட்டில் இன்று பொலித்தீன் பாவனை அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பல தீங்குகளுக்கு முகங் கொடுக்கின்றனர். எனவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தீங்குகளை சுட்டிக்காட்டி 100 சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**அல்லது**

இன்று மாணவர்கள் வாசிப்பில் அதிக அக்கறை காட்டுவதில்லை. அதனால், எதிர்காலத்தில் அறிவு பெறும் நிலையில் நூல்கள் பயனற்ற நிலைக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் நூலக வாரம் ஒன்றை ஏற்படுத்தல் தொடர்பாக பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

( 15 புள்ளிகள் )



kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම2018 -
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation2018 -

| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | විෂයය / பாடம் / Subject | தமிழ் மொழியும் இலக்கியமும் - III | පත්‍රය / வினாத்தாள் / Paper | III, | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

නම
பெயர்
Name

**இப்பத்திரத்தின் மொத்தப்புள்ளி 80 ஆகும்.**

**கவனிக்க வேண்டியவை**

- அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

---

1. சுருக்கமான விடை தருக.

i) ''வண்டோ கானத்திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்''
அ) வண்டு எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?
ஆ) இந்நீதிப்பாடல் எக்காலத்துக்குரியது என எண்ணப்படுகிறது?

ii) ''ரயலிருப்பு மிம் மூன்று
நன்மை பயத்தலில''
அ) நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?
ஆ) இப்பாடல் யாரால் பாடப்பட்டது?

iii) ''மிக்காரைச்சேர்தல் மிகமான முன் இனிதே''
அ) இப்பாடல் இடம் பெறும் நூல் யாது?
ஆ) மிக்கார் என்பது யாரைக் குறிக்கிறது?

iv) ''பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியருமல்லர்''
அ) இப்பாடல் அடி மூலம் வெளிக்காட்டப்படுவது யாது?
ஆ) இதற்கு எடுத்துக்காட்டப்பட்ட விடயங்கள் எவை?

v) ''கைவேல் – எறிகிறவேல் – இறகுள்ள அம்பு – இல்லாத அம்பு – வாள் – சக்கரம்''
அ) இவ்வாயுதங்கள் எவற்றிற்கு எடுத்துக் காட்டப்படுகின்றன?
ஆ) இது யார் யாருக்கிடையில் நடைபெற்றது?

vi) ''ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும்''
அ) இப்பாடல் இடம்பெறும் நூல் யாது?
ஆ) இதைப் பாடியவர் யார்?

vii) ''இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?'' என்றேன்.
அ) இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
ஆ) பைல் என்ற சொல்லின் தமிழ் வடிவம் எது?



kalvi.lk

viii) “கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்”

அ) சந்தி பிரித்து எழுதுக?

ஆ) வேணியலங்காரர் என்பது யாரைக் குறிக்கிறது?

ix) “புலங்களோடு கரணமும் ஆவியும்”

அ) ஐம்புலன்கள் எவை?

ஆ) கரணங்கள் எவை?

x) “மூடித் திறக்கின் முகம் காட்டும்”

அ) இதில் வரும் சிலேடையை எடுத்துக் காட்டுக?

ஆ) இப்பாடலில் வரும் இன்னொரு சிலேடையை எடுத்துக் காட்டுக?

(2 X 10 = 20 புள்ளிகள் )

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப்பாடலில் எத்தகைய நட்பு சிறந்தது, எத்தகைய நட்பு கூடாதது என்று கூறப்படுகிறது?

ஆ) அதற்கான காரணம் யாது?

2) பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சுங்கிட்டெறியக் குரங்கிளநீர்
தனைக் கொண் டெறியுந் தமிழ் நாடா
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே யிராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

அ) இப்பாடலில் கூறப்படும் தமிழ்நாட்டு வளங்கள் பற்றிக் குறிப்பிட்டுக் கூறுக?

ஆ) சோழ மன்னன், பெண் பற்றிக் கூறப்படுபவை யாவை?

3) மாத மூன்று மழையுள்ள நாடு
வருஷ மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு
போத மூன்று நலஞ்செயு நாடு
புவனமூன்று வலஞ்செயு நாடு
நாத மூன்றுரு வானகுற்றால
நாத ராரிய நாடெங்கள் நாடடே

அ) போதம் மூன்றும் எவை?

ஆ) புவனம் மூன்றும் எவை?

4) பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்கின்ற “பிறகு” அந்த சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரை மட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால், தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. “ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்” என்றார் நாவலர். அவர்கள் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

அ) நாவலர் சபைக்கு வந்ததும் இடம் பெற்றவை எவை?

ஆ) தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. இது தொடர்பான விடயங்களை எடுத்துக் கூறுக?



kalvi.lk

5) இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிஞர்களுள் பாரதியார் அவர்கள் மிகப் பிரபல்யம் வாய்ந்தவர். அவரது கவிதைகளில் கையாளப்பட்டுள்ள எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு என்பன போன்ற சிறப்பம்சங்கள் இலக்கிய உலகில் பாரதிக்கு தனிச்சிறப்பைப் பெற்றுக் கொடுத்தது எனலாம்.

அ) பாரதியார் இருபதாம் நூற்றாண்டுக்குரிய கவிஞர்களுள் பிரபலம் பெற்றமைக்கான காரணம் யாது?
ஆ) பாரதியார் எவ்வகையில் ஏனைய கவிஞர்களில் இருந்து வேறுபடுகின்றார்?

( 4 X 5 = 20 புள்ளிகள் )

3. நீதிப் பாடல்கள் என்ற பாடப்பகுதியில்
அ) மனித வாழ்வுக்கு உதவும் வழி வகைகள் பற்றியும்
ஆ) உவமிக்கப்படும் விடயங்கள் பற்றியும்
எடுத்துரைக்க

**அல்லது**

குற்றாலக் குறவஞ்சி என்ற பாடப் பகுதியில்

அ) இயற்கை வளங்கள் எடுத்துரைக்கப்படுமாறு
ஆ) நாட்டுச்சிறப்பு எடுத்துரைக்கப்படுமாறு
என்பது பற்றி எடுத்துக் கூறுக.

( 15 புள்ளிகள் )

4. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் வரும்

அ) நாவலர் அவர்களின் திறமை, இயல்பு, நேர்மை
ஆ) பிறிற்றோவின் நேர்மையின்மை
வெளிப்படுமாறு

**அல்லது**

கம்பியூட்டர் சிறுகதையின் மூலம் அறியும்

அ) படிப்பினைகள், அனுபவங்கள் பற்றி எழுதுக.

ஆ) இக்கதையில் வரும் உவமைகள் பற்றி 4 எழுதுக.

( 15 புள்ளிகள் )

**பின்வரும் 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

5. பாரதியார் சுயசரிதையில்

அ) உவமைகளை எடுத்துக் காட்டுக.

ஆ) பாரதியார் கூறும் விடயங்கள் பற்றிக் கூறுக. (10 புள்ளிகள்)

6. தனிப்பாடல்கள் என்ற பாடத்தில்

அ) புகழேந்திப் புலவர், படிக்காசுப் புலவர், காளமேகப் புலவர் பற்றி எடுத்துரைக்க.
ஆ) தனிப்பாடல்கள் எவ்வாறு பயன்பாடு கொண்டுள்ளது என்பது பற்றி எழுத்துரைக்க.

(10 புள்ளிகள்)

7. கம்பியூட்டர் என்ற சிறுகதையில் வரும்

அ) பாத்திரங்களைப் பற்றி எடுத்துரைக்க.
ஆ) பின்வரும் கலைச் சொற்களின் தமிழ் வடிவம் தருக.
   i. யூ பி எஸ்
   ii. ப்ளொப்பி
   iii. ஹார்ட் ட்ரைவ்

( 10 புள்ளிகள் )



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457